# தெரனியகல பிரதேச சபை

## கேகாலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூலி 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் வருடம் இறுதிக் கணக்கு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட கீழ் வரும் குறைபாடுகளை சரி செய்வதாக 2015 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு முன் மொழியப்பட்ட பதில்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(i) 2010 வருடம் முதல் 2015 ஆம் வருடம் வரையிலான காலப்பகுதிக்குள் நீர் வாடிக்கையாளர்களிடமிருந்து நீர் விநியோகம் பெற்றுக் கொள்வதற்காக வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா. 2,305,983 நீர் விநியோகம் வழங்கும் நடவடக்கைக்காக செலவு செய்யப்பட்டிருந்தும் அதனை பொது வைப்பாக காட்டப்பட்டிருந்தது.

(ii) புரநெகும் வேலைத் திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற 02 கணனிகள் அதற்குரிய சாதனங்கள் மற்றும் பல தொகுதிகளின் பெறுமதி கணிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படவில்லை.

(iii) விநியோகம் மற்றும் உபகரண செலவு, களஞ்சிய முற்பணக் கணக்கு முலம் சீராக்காது நேரடியாக செலவுத் தலைப்புகளில் வரவு வைக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iv) சபைக்குரிய 01 ஏக்கர் 03 ரூட் 30 பர்ச்சஸ் 03 காணித் துண்டு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பஸ் தரிப்பு நிலையத்திற்கருகில் 29 சந்தைக் கடைகள் முற்பணம் பெற்று நிர்மாணிக்கப்பட்டு குத்தகைக்கு வழங்கும் அடிப்படையில் 2015 ஆம் வருடம் 29 குத்தகைக்காரர்களிடமிருந்து பெறப்பட்டிருந்த ரூபா. 24,299,000 கீ மணி (Key money) பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு குறிப்பிட்ட விடயத்திற்கு பயன்படுத்தி கடை உரிமையாளர்களுக்கு கடைகளை பொறுப்பளிக்கும் போது வருமானமாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்தும் அவ்வாறு செய்யாது பணத்தைப் பெறும் சந்தர்பத்தில் வருமானமாக பதிவு செய்து அப் பணத்தை குறிப்பிட்ட விடயத்திற்கு பயன்படுத்தாது வேறு விடயத்திற்கு செலவு செய்ப்பட்டிருந்தது. இதற்கு மேலாக ஒப்பந்தத்திற்கு வராத மேலும் 24 கடைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய முற்பணம் ரூபா. 24,630,000 கடந்த வருட வருமானமாக மற்றும் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதி அப் பெறுமதியால் அதிகரித்துக் காணப்பட்டது.

(இ) முன்மொழியப்பட்ட பஸ் நிலைய கடைகளின் கட்டுமானப் பணி இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் நிர்மானத் திட்டத்தின் படி மொத்த செலவு மதிப்பீடு ரூபா. 25,500,000 வினை 2015 ஆம் வருட செலவாகவும் கடன்கொடுத்தோராகவும் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக கடன்கொடுத்தோர் ரூபா. 25,500,000 அதிகமாகவும் மற்றும் திரண்ட நிதி அப் பெறுமதியினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) வாராந்தச் சந்தை கடை ஒன்று மீளாய்வாண்டில் இடைக் கால குத்தகைக்கு வழங்கும் போது இடைக் கால குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட்ட நூற்றுக்கு 25 வீதத்திற்கு மேலதிகமாக முற்பணமாக ரூபா. 145,000 வினை வருடத்துக்குரிய வருமனமாக கொள்ளாது கீ மணி (Key money) யில் குறைத்ததன் காரணமாக பெற வேண்டிய வாராந்த சந்தை வருமானம் மற்றும் பெற வேண்டிய கீ மணிப் பண கடன்பட்டோர் ரூபா.145,000 வினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சபையினது வருமானமாக கணக்கீடு செய்யக் கூடிய கட்டிட விண்ணப்படிவம் ரூபா. 43,600 பொது வைப்புக் கணக்கில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தது.

1.3.2 <u>இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்</u>

06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டு மொத்தம் ரூபா. 15,468,868 ஆவதுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா. 11,333,399 ஆக இருப்பதுடன் ரூபா. 4,135,469 வேறுபாடாக இருந்தது.

1.3.3 <u>பெற வேண்டிய கொடுக்க வேண்டிய கணக்குகள்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 76,449,306 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா.6,381,651 ஒரு வருடத்திற்கும் மேலான பழைய மீதியாகும்.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் கொடுக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 67,729,923 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா.1,213,700 ஒரு வருடத்திற்கும் மேலான பழைய மீதியாகும்.

1.3.4 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை</u>

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் <u>தீர்மாணங்களுடனான தொடர்பு</u> | <u>இணங்காமை</u> |
|---|---|
| (அ) 1987 ஆம் வருட 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவு. | 2 வருடத்திற்கு அதிகமான நிலுவை வரிப் பணம் ரூபா. 141,716 மற்றும் ஆதன வரி ரூபா. 566,707 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை. |

2011

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 371(2) ஆ | முற்பணம் பெற்றுக் கொண்ட விடயங்கள் முடிவுற்ற பின்னரும் குறிப்பிட்ட செலவினைத் தீர்க்க வேண்டியிருந்தும் 2016 ஆம் வருடம் 14 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா. 129,700 வினை தீர்க்கும் போது 01 முதல் 11 நாட்கள் வரை தாமதமாகியிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை xxiv அத்தியாயம் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவு | 10 ஊழியர்களது 1993 ஆம் வருடத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா. 243,610 ஊழியர் கடன் மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை |
| (இ) 2010 நவம்பர் 16 ஆம் திகதி சபரகமுவ பிரதான செயளாலரின் சீஎம்/ஏடீ/20/03 சுற்று நிரூபம் | சிற்றுழியர்களாக நியமனம் பெற்றவர்கள் நியமனம் பெற்ற பதவிகளில் அமர்த்த வேண்டியிருந்தும் சிற்றுழியர்களாக நியமனம் பெற்ற 09 ஊழியர்கள் வேறு விடயங்களுக்குப் ஈடுபடுத்தப்பட்டிருந்தனாட |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 2,174,378 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 3,608,013 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 1,433,635 குறைவினைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 1,433,635 தொகை குறைவுக்கு 03 வருமான விடயங்களின் குறைவும் 03 செலவின விடயங்களில் அதிகரிப்பும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.12.31 இல் நிலுவை<br>2016.01.01 இல் காணப்பட்ட மீதி | 2016.12.31 இல் நிலுவை<br>ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 2,535 | 1,730 | 5,599 | 4,248 | 805 | 1,351 | 2,156 |
| ii | வாடகை | 142 | 81 | 4,434 | 4,417 | 61 | 17 | 78 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 86 | 2 | 661 | 661 | 84 | - | 84 |
| iv | ஏனைய வருமானம் | 47,655 | 15,865 | 62,648 | 20,306 | 31,790 | 42,342 | 74,132 |
| | மொத்தம் | 50,418 | 17,678 | 73,342 | 29,632 | 32,740 | 43,710 | 76,450 |

2.3.2 <u>அனுமதிப் பத்திரக் கட்டணம்</u>

வருடத்தின் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தும் மீளாய்வாண்டில் 41 வியாபாரம் தொடர்பாக 2016 ஜுன் மாதம் முதல் ஒக்டோபர் வரையான காலப் பகுதியில் வரி செலுத்தியிருப்பதால் அனுமதிப் பத்திரம் இல்லாது வியாபாரத்தினை நடாத்திச் சென்றிருப்பது அவதானிக்கப்பட்டது.

2.3.3 <u>வேறு வருமானம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) <u>நீர்க் கட்டணம்</u>

2016 திசம்பர் 31 ஆம் திகதிக்கு நீர் விநியோகம் இடங்களிலிருந்து ரூபா. 364,424 நிலுவை நீர்க் கட்டணத்தினை அறவிட நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(ஆ) <u>பொது மலசல கூடக் கட்டணம்</u>

பொது மலசல கூடக் கட்டணம் சரியான முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளாததனால் 2013 மற்றும் 2015 வருடங்களுக் குரிய அறவிடாத மொத்தக் கூட்டுத் தொகை ரூபா. 4,198 நிலுவையாகக் காணப்படுகின்றது.

(இ) <u>விளம்பர அறிவித்தல் பதாகைக் கட்டணம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2013 திசம்பர் 20 ஆம் திகதி வர்த்தமானிப் பத்திரகையின் 10 (ஆ) பகுதியின் கீழ் 2014 ஆம் வருட முதல் எதிர்பார்க்கப்படும் அளவில் விளம்பர அறிவித்தல் பதாகைக் கட்டணம் சீரமைக்கப்பட்டிருந்தும் சதுர அடி தொடர்பாக ஒரு மாதத்திற்கோ அதன் பகுதிக்கு ரூபா. 50 படி அறவிடப்படுவதாக காட்டப்பட்டிருந்ததாயினும் காலத்தினை கவனத்திற் கொள்ளாது கட்டணம் அறவிப்பட்டிருப்பதனால் ஒரு வருடத்திற்கோ அதற்கு மேலாக காலத்திலிருந்து காணப்படும் நிரந்தர விளம்பர அறிவித்தல் தொடர்பாக பெற வேண்டிய வருமானம் கிடைத்திருக்கவில்லை.

(ii) தொலை பேசி நிறுவனம் ஒன்றினால் பெறப்பட்ட ரூபா. 23,000 விளம்பர அறிவித்தல் பதாகைக் கட்டணம் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) தற்காலிக அறிவித்தல் பதாகைக் கட்டணமாக பெறப்பட்டிருந்த ரூபா. 8,920 குறிப்பிட்ட அளவு, சதுர அடி அளவு, பொருத்தப்பட்ட இடம், காட்சிக்கு வைக்கும் நாட்கள் விளம்பர நிறுவனம் போன்ற விடயங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2016 வருடத்தில் நடாத்தப்பட்ட சட்டரீதியற்ற விளம்பரங்கள் தொடர்பான ஆய்வின் படி அறவிட வேண்டிய அறிவித்தல் பதாகைக் கட்டண அளவு ரூபா.192,713 ஆகும்.

(ஈ) <u>சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(i) மாதிரி பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 15 தொழில்கள் நிறுவனங்கள் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருக்காததால் ரூபா.15,000 வருமானம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) 2000 ஆம் ஆண்டு 53ஆம் இலக்கம் மற்றும 1988 ஆம் வருட 56 ஆம் இலக்கதினையுடைய சட்டத்தின் முலம் மறுசீரமைக்கப்பட்ட 1980 ஆம் வருட 47 ஆம் இலக்கத’தினையுடைய தேசிய சூழல் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1533/16 மற்றும் 2008 ஜனவரி 25 ஆம் திகதி அதி விசேட வர்த்தமனனிப் பத்திரிகையின் படி சூழல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய தொழில் 01 அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாததால் ரூபா. 4,000 நட்டம் சபைக்கு ஏற்பட்டிருந்தது.

2.3.4 <u>நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா. 4,667,212 வினைப் பெற்றுக் கொள்ள சபை நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் வருடத்திற்காக முத்தரைக் கட்டண உப அட்டவணை பெறப்பட்டிருக்காததால் வரவு செலவுப் பெறுமதியான ரூபா. 3,500,000 வினை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.2014 வருடம் முதல் 2016 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய அறவிட வேண்டிய நிலுவை ரூபா. 6,422,606 ஆகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

பஸ் நிலைத்திற்கருகில் 51 வியாபாரக் கடைகள் நிர்மானிப்பதற்கு 2015 ஆம் வருடத்தில் திட்டமிட்டு அதில் 29 கடைகள் தொடர்பாக கீ மணி (key money) ரூபா. 24,299,000 அறவிடப்பட்டிருந்ததுடன் 2017 மே 20 ஆம் திகதி ஆகும் போதும் கடைகள் நிர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

சபையினால் பயன்படுத்தப்படுகின்ற உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சரவை மூலம் பெறப்பட்ட 03 வாகனத்தின் உரிமையினை சபைக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) சபையினால் செயற்படுத்தப்படுகின்ற இரண்டு நீர் விநியோகத் திட்டத்தில் கஹபடே நீர் விநியோகத்திட்டம் தொடர்பாக கிலோரின் இட்டு சுத்திகரிக்கப்படுவதற்கு முன் எந்தவித முறையிலும் சுத்திகரிக்கப்படாது லிஹினியாகல நீர் விநியோகத் திட்டத்தின் நீருடன் கலந்து வழங்கப்படுவதால் நீர் வாடிக்கையாளர்களுக்கு சுத்தமான குடி நீரினை வழங்குவதற்கு சபை தவறியிருந்தது.அந் நீர்விநியோகத் திட்டத்தினால் வழங்கப்படும் நீரில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய பக்டீரியாக்கள் உள்ளது என தெரனியகல சுகாதார வைத்திய அதிகாரியின் பரிசோதனை அறிக்கைப் படி உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2012 செப்தெம்பர் 19 ஆம் திகதி முதல் 2016 நவம்பர் 23 ஆம் திகதி வரை பெறப்பட்டிருந்த 21 கட்டிட விண்ணப் பத்திரம் தொடர்பாக பரிசோதனைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தும் அவற்றில் காணப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்து அனுமதி வழங்குவதற்கு சபை நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

3.4 <u>சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்</u>

மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை தொழில்கள் தொடர்பாக பிரதான நிறுவனத்தினால் நிதி கிடைப்பதற்கு முன்னர் சபை நிதியினால் கொடுப்பனவு செய்யப்பட்ட 03 தொழில்கள் தொடர்பாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா. 1,533,527 அறவிடுவதற்கு 02 மாதம் முதல் 04 வருடம் வரை தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் 2014 ஜனவரி 24 ஆம் திகதி நக்காவிட்ட சமூக மண்டபம் மற்றும் மலசல கூடம் நிர்மானிக்கும் தொழில் தொடர்பாகவும் இவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணம் ரூபா. 54,187 வினை 2016 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மீளப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

3.5 <u>விளைவற்ற மற்றும் பயன்படுத்தாத சொத்துக்கள்</u>

சபைக் அனுமதித்த ஓட்டுனர் போததன் காரணமாகவும் வாகனங்கள் சரியான முறையில் பழுது பார்க்கப்படாததனால் சபைக்குரிய 04 வாகனங்கள் சரியான முறையில் பயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.6 <u>கண்டறியப்பட்ட நட்டம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) சபையினது 02 வாகனங்கள் விபத்துக்குள்ளாகிய காரணத்தால் அதற்கு ஏற்பட்ட மதிப்பீட்டு நட்டம் மற்றும் காப்புறுதி நிறுவனத்தால் கொடுப்பனவு செய்யப்படுகின்ற பணத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு ரூபா. 76,762 நட்டத்தினை சபை ஏற்க வேண்டியிருந்தது.

(ஆ) 2016 செப்தெம்பர் 07 ஆம் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த சபைக்குரிய வாகனத்திற்கு காப்புறுதி நிறுவனத்தினால் நட்டயீடு வழங்குவதற்கு மறுக்கப்பட்டிருந்ததுடன் நட்டத்தினை மதிப்பீடு செய்து அதற்குப் பொறுப்பான அதிகாரிகளைக் கண்டறிந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(இ) மாதந்த வாடகை செலுத்தாததன் காரணமாக சபைக்குரிய மீன் கடை 2016 மார்ச் 31 ஆம் திகதி வரை சீல் வைக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக மீண்டும் டென்டர் செய்வதோ அடுத்த ஏலம் கோரியவரிடம் விசாரித்து குத்தகைக்கு வழங்க நடவடிக்கை மேற் கொள்ளாததன் காரணத்தால் மொத்தமாக சபைக்கு ரூபா. 71,662 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) 07 தொலைபேசிக் கோபுரங்கள் தொடர்பாக ரூபா. 3,000 படி அறவிட வேண்டிய வருடாந்த வியாபார வரி அறவிடாததன் காரணமாக ரூபா. 21,000 கிடைக்க வேண்டிய வருமானம் கிடைத்திருக்கவில்லை.

3.7 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) வெவ்வேறு ஒதுக்கீடுகளின் கீழ் 164 தொழில்கள் தொடர்பாக ரூபா. 42,944,113 மதிப்பீடு செய்யப்பட்டிருந்துடன் அதில் ரூபா. 40,727,061 விற் குரிய வேலைகள் முடிவுற்றிருந்தது. அம் முடிவுப் பெறுமதியில் ரூபா. 5,668,972 மட்டும் வருடத்தினுல் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா. 35,058,089 அதாவது நூற்றுக்கு 86 வீதம் கடன்கொடுத்தோர் மீதியாகும்

(ஆ) மூன்று நிறுவனங்களுக்கு சொந்தமான ரூபா.872,246 வினையுடைய 05 தொழில்கள் நடைமுறைப் படுத்தாது கைவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 வருடத்தில் ரூபா. 23,242 செலுத்தப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.686,098 வான 03 வேலைகள் ரத்து செய்யப்பட்டு/ செயற்படுத்தப்படாததன் காரணமாக செலுத்தப்பட்ட பணம் விளைவற்ற செலவாகக் காணப்பட்டது.

(ஈ) தெரனியகல சமன்தேவாலயத்தின் காணியில் மலசல கூட அமைப்பொன்று நிர்மானிக்கும் போது 04 வேலைகளுக்காக ரூபா. 19,231 வேலையினை முடிப்பதற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்தது.

3.8 தின்மகக்கழிவு முகாமை

சபை அதிகார எல்லையினுல் சேகரிக்கப்படுகின்ற குப்ழப கூலங்கள் மற்றும் கழிவுகள் மீள் சுழற்சி செய்வதோ அல்லது சரியான முறையில் அகற்றுவதற்கான செயன்முறையின்றி சீத்தாவக ஆற்றுக்கு அருகில் அமைந்கிருக்கும் மயான இடத்தின் திறந்த வெளியில் போடப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்ட பாதீட்டில் ஒதுக்கிடு செய்யப்பட்ட செலவு விடயங்கள் 48 தொடர்பாக மொத்தம் ரூபா.3,722,750 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவு விடயங்கள் 24 தொடர்பாக ரூபா.42,034,994 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 60 இருந்து 99 வரை அதாவது மொத்தக்கூட்டுத் தொகை ரூபா.45,757,744 பயன்படுத்தப்பட்டிருக்கலில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | அவதானிக்க வேண்டிய விடயம் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கடந்த வருடம் கணக்காய்வாளர் நயகத்தின் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் மீளாய்வாண்டில் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நாட்குறிப்புக்களின் விளக்கங்கள் தெளிவில்லாதது. |
| | (iii) உப அட்டவணைகள் கணக்குகளுடன் இணங்கவில்லை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) மதிப்பீட்டு வரி தொடர்பாக சொத்து மதிப்பீடு சரியான முறையில் செய்யப்படாதது. |
| | ii) நிலுவை வருமானம் அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளததது. |
| | (iii) வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பாக வருடாந்த ஆய்வு மேற் கொள்ளாதது. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) மதிப்பீட்டு ஒதுக்கீடுகளில் கவனத்திற் கொள்ளக் கூடியவகையில் மிகுதியாகக் காணப்பட்டது. |
| | (ii) மதிப்பீட்டு வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) வாகன நிர்வாகம் | (i) தினசரி ஓட்டுநர் பதிவுப் புத்தகம் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | (ii) வானங்களில் எரிபொருள் பரிசோதனை செய்யாதததது. |